2006 ஆகஸ்ட் 7] [திரு. வேல்முருகன்]

குறிப்பாக D–5 D விடுதியில் நான் ஐந்தாவது தளத்தில் தங்கி இருக்கிறேன். அங்கே அண்ணன் சிவபுண்ணியம் அவர்களும், அண்ணன் ஆறுமுகம் போன்றவர்களும் இருக்கிறோம். நாங்கள் சட்டப் பேரவைக் கூடிய நாளிலிருந்து, வருவதற்கு கிளம்புகிற போதெல்லாம், அங்கே இருக்கின்ற மின் தூக்கி அடிக்கடி பழுது ஏற்பட்டு, நாங்கள் அதிலே மாட்டிக்கொள்கிறோம். நான் மட்டும் 5 முறை மாட்டிக் கொண்டு தவித்திருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இதை, பிறகு வந்து பேசுங்கள். நான் ஏற்பாடு பண்ணச் சொல்கிறேன். (குறுக்கீடு) பிறகு வாருங்கள். பிறகு அறையிலே வந்து சொல்லுங்கள். நான் ஏற்பாடு பண்ணச் சொல்கிறேன். பிறகு வாருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மின் தூக்கியில் வேல்முருகன் மாத்திரம் வந்தால் பரவாயில்லை. சிவபுண்ணியமும் வருவதால் ஏதாவது சிரமம் ஏற்பட்டு இருக்கலாம். (சிரிப்பு)

## 4. விதி 110—ன்கீழ் அறிக்கை

### கிருஷ்ணா நதிநீர் பெறுவது மற்றும் பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதாக வந்துள்ள செய்திகள் தொடர்பாக ஆந்திர அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தை – மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை ஒன்றினை அளிக்க மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகருக்கு தற்போது நாளொன்றுக்கு 640 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகளான பூண்டி, சோழவரம் மற்றும் செங்குன்றம் ஏரிகளில் தற்போது சுமார் 1.5 டி.எம்.சி. தண்ணீர் உள்ளது. இந்நிலையில் கிருஷ்ணா நதிநீரை உடனடியாகப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[டாக்டர் க. பொன்முடி] [2006 ஆகஸ்ட் 7

தற்போது ஏரிகளில் உள்ள தண்ணீரின் அளவைக் கருத்தில் கொண்டு, தெலுங்கு கங்கை திட்டத்தின் மூலம் கண்டலேறு அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடக் கோரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களுக்கு 8–7–2006 அன்று கடிதம் எழுதி இருந்தார்கள். இதைத் தொடர்ந்து 24–7–2006 அன்று ஆந்திர அரசின் தலைமைச் செயலாளரின் தலைமையில் அதிகாரிகள் குழு சென்னைக்கு வருகை புரிந்து தமிழக தலைமைச் செயலாளர் மற்றும் அதிகாரிகளுடன் இப்பொருள் பற்றி கலந்தாலோசித்தனர்.

இதன் தொடர்ச்சியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னைக்கு கிருஷ்ணா நதிநீர் பெறுவது குறித்தும், பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதாக வந்துள்ள செய்திகள் குறித்தும் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்த என்னையும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் ஹைதராபாத் சென்று வரும்படி அறிவுறுத்தினார்கள்.

5–8–2006 சனிக்கிழமை அன்று நானும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினோம். எங்களுடன் பொதுப் பணித் துறை மற்றும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர்களும் மற்ற அதிகாரிகளும் உடன் இருந்தனர். ஆந்திர மாநிலத்தின் சார்பில் மாண்புமிகு பாசனத் துறை அமைச்சர் அவர்களும் மற்ற உயர் அதிகாரிகளும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அக்கூட்டத்தில் சென்னைக்குக் குடிநீர் நிலைகளிலுள்ள தண்ணீரின் இருப்பினை கருத்தில் கொண்டு உடனடியாக கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்து விடுமாறு கேட்டுக் கொண்டோம். மேலும், கண்டலேறு மற்றும் சோமசீலா அணைகளின் கொள்ளளவை முழு அளவிற்கு உயர்த்த வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறும், நீர்வரத்துக் கால்வாய்களைச் செப்பனிடும் பணிகளை விரைவுபடுத்தி முடித்திடுமாறும், ஸ்ரீசைலம் அணையிலிருந்து அதிகமான அளவு நீரினை சோமசீலா அணைக்குக் கொண்டு செல்லத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறும், தெலுங்கு கங்கை திட்ட நடைமுறை விதிகளை ஓராண்டு காலத்திற்குள் தயார் செய்து முடித்திடுமாறும் கேட்டுக் கொண்டோம்.

மேலும், பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதற்கான பணிகளைத் துவங்கி உள்ளதாக வந்துள்ள செய்திகளை மாண்புமிகு ஆந்திர முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்து இதுபற்றிய விவரங்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டோம்.

2006 ஆகஸ்ட் 7] [டாக்டர் க. பொன்முடி]

மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்கள், குப்பம் மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் வசிக்கும் மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யவும், அப்பகுதியில் உள்ள சுமார் 4 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி செய்வதற்கும் பாலாற்றின் குறுக்கே சிறிய அளவிலான அணை கட்ட தற்போது ஆய்வுப் பணிகள் நடக்கிறதே தவிர, எந்தவித அரசு ஆணையோ நிதி ஒதுக்கீடோ செய்யப்படவில்லை என்று தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் சார்பில், நாங்கள், பாலாற்றின் குறுக்கே கட்டப்படும் எந்த ஒரு தடுப்பு அமைப்பும் தமிழகத்தின் 3 மாவட்டங்களிலுள்ள குடிநீர் மற்றும் பாசன வசதிகளுக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்று எடுத்துக் கூறினோம். மேலும், பாலாற்றின் நீரை ஆதாரமாகக் கொண்டு கல்பாக்கம் அணுமின் நிலையம் செயல்படுவதையும் கருத்தில் கொண்டு பாலாற்றின் குறுக்கே அணை கட்டுமானப் பணிகளை ஆந்திர அரசு செயல்படுத்துவது தமிழக மக்களின் நலனை பாதிக்கும் என்று வலியுறுத்திக் கூறினோம். மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தின் நலனுக்கு எதிராகவும், சட்டத்திற்குப் புறம்பாகவும் ஆந்திர அரசு எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காது எனவும், திட்டமிடப்படும் தடுப்பணை சம்பந்தமான விவரங்களை தமிழக அரசிடம் முன்கூட்டி அளிப்பதாகவும், நமது கருத்தை அறிந்த பின்பே மேல் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். நாங்கள், பாலாற்றின் குறுக்கே கட்ட உத்தேசித்துள்ள தடுப்பணைத் திட்டத்தைக் கைவிடுமாறு மீண்டும் வலியுறுத்தி கேட்டுக் கொண்டுள்ளோம். இது குறித்து நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்களுடன் மேற்கொண்டு பேச உள்ளார்கள்.

*முற்பகல் 10–35*

சென்னைக்குக் குடிநீர் வழங்குவதைப் பொறுத்தவரையில் நமது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்கள் இந்த மாதம் 15 ஆம் தேதி முதலே கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து நமது எல்லைக்கு வினாடிக்கு ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து சேரும் அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) தேவையான நீரைத் திறந்துவிட உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

ஆந்திர அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளின் மூலமாகவே பாலாற்றினை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள மக்களின் நலனையும்,

சென்னை நகர மக்களின் குடிநீர்த் தேவையையும் பூர்த்தி செய்ய இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அறிவிப்புகள்

### (அ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு, கல்விக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பின்வரும் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு, கல்விக் குழு மற்றும் நிர்வாகக் குழுக்களுக்கு அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகப் பணிபுரிய அவற்றின் நேர் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள காலியிடங்களுக்குச் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு அப்பல்கலைக்கழகங்களின் பதிவாளரிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

| பல்கலைக்கழகம் | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|
| அழகப்பா பல்கலைக்கழகம் | 1 |
| அண்ணா பல்கலைக்கழகம் | 1 |
| அண்ணாமலைப் பல்கலைக்கழகம் | 3 |
| பாரதியார் பல்கலைக்கழகம் | 2 |
| பாரதிதாசன் பல்கலைக்கழகம் | 2 |
| தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் | 2 |
| சென்னைப் பல்கலைக்கழகம் | 6 |
| மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் | 4 |
| மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் | 2 |